# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 48/2021** **நாள் 11.10.2021**

தமிழ்நாட்டில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட 140 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 74 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 1,381 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், 2,901 கிராம ஊராட்சித் தலைவர் பதவியிடங்களுக்கும் மற்றும் 22,581 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் என 27,003 பதவியிடங்களுக்கு சாதாரணத் தேர்தல் அறிவிக்கை 15.9.2021–ல் வெளியிடப்பட்டு வேட்புமனுக்கள் பெறப்பட்டு. கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களில் 2,874 பதவியிடங்களும், கிராம ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் 119 பதவியிடங்களும், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 5 பதவியிடங்களும், மாவட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 2 பதவியிடங்களும் வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஒரு கிராம ஊராட்சி தலைவர் பதவியிடம் நீதிமன்ற வழக்கின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாலும், ஒரு ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கும், 2 கிராம ஊராட்சி தலைவர் பதவியிடத்திற்கும், 21 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடத்திற்கும் வேட்புமனுக்கள் பெறப்படாததாலும், திரும்பப்பெற்றுக்கொண்டதாலும் இப்பதவியிடங்களுக்கு வாக்குப்பதிவு நடைபெறவில்லை. மீதமுள்ள 138 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், 1375 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், 2779 கிராம ஊராட்சி தலைவர் மற்றும் 19,686 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும் இரண்டு கட்டமாக 6.10.2021 மற்றும் 9.10.2021 ஆகிய நாட்களில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

இத்தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவில் 7,921 வாக்குச்சாவடிகளிலும், இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் 6,652 வாக்குச்சாவடிகளிலும், மொத்தம் 14,573 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெற்றது. இரண்டு கட்ட தேர்தல்களில் 77.90 சதவிகித வாக்குகள் பதிவாகின.

–2–

முதல் கட்ட வாக்குப்பதிவில் தென்காசி மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம், சிவசைலம் கிராம ஊராட்சி வார்டு எண் 3க்கான உறுப்பினர் தேர்தலில் வாக்குப்பதிவின் போது ஏற்பட்ட சிறு பிரச்சனையின் காரணமாக மறுவாக்குபதிவு 09.10.2021 அன்று வாக்குசாவடி எண் 130ல் நடைபெற்றது. மேற்படி மறுவாக்குபதிவில் 80.79 சதவிகித வாக்குகள் பதிவாகின.

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவில் காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், பூந்தண்டலம் கிராம ஊராட்சியில் அமையப்பெற்ற வாக்குச்சாவடி எண் 173ல் ஊராட்சி ஒன்றிய வார்டு எண் 12க்கான உறுப்பினர் தேர்தலில் வாக்குச்சீட்டுகளில் தவறான சின்னம் பதிவாகியிருந்ததால் மேற்படி வாக்குச்சாவடியில் மறுவாக்குபதிவு 11.10.2021 அன்று நடைபெற்றது. மேற்படி மறுவாக்குபதிவில் 65.18 சதவிகித வாக்குகள் பதிவாகின.

செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஆலப்பாக்கம் கிராம ஊராட்சியில் அமையப்பெற்ற வாக்குச்சாவடி எண் 32ல் மேற்படி ஊராட்சியின் 2வது வார்டு உறுப்பினர் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டதை தொடர்ந்து 11.10.2021 அன்று மறுவாக்குபதிவு நடைபெற்றது. மேற்படி மறுவாக்குபதிவில் 91.30 சதவிகித வாக்குகள் பதிவாகின.

ஏனைய 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நிரப்பப்படாத மற்றும் காலியான பதவியிடங்களுக்கு 09.10.2021 அன்று நடைபெற்ற தற்செயல் தேர்தலுக்கான வாக்குப்பதிவில் 70.51 சதவிகித வாக்குகள் பதிவாகின.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

11/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்